# In the Court of the District Munsif, Eraniel

**Original Suit No. 95/2023** **Date:02.04.2026.**

**(DW1)- ராஜசெல்வஜெரின்**

வாதி தரப்பு குறுக்கு விசாரணை

1. எனக்கும் எனது கணவருக்கும் எப்போது திருமணம் நடைபெற்றது என்றால் 2016 வருடம் நடைபெற்றது. எனது பெற்றோரின் ஊர் எது என்றால் மேலபெருவிளை ஆகும். எனது கணவர் வீட்டிற்கும் எனது பெற்றோர் வீட்டிற்கும் 8 கிலோ மீட்டர் தெலைவு இருக்குமென்றால் 12 கீலோ மீட்டர் தெலைவு இருக்கும். எனது திருமணத்திற்கு பின்பு தான் கணவரின் ஊர் சம்பந்தமான விசியம் தெரியும் என்றால் சரியல்ல, எனது கணவர் எனது உறவினர் என்பதால் திருமணத்திற்கு முன்பே தெரியும். எனது கணவரின் தாத்தா பெயர் என்ன என்றால் தங்கப்பன் ஆகும். எனது கணவரின் வீடும் அப்பகுதியில் உள்ள மற்ற கிருஸ்தவர்களும் ஆத்திவிளை சபையை சார்ந்தவர்கள் என்றால் மற்றவர்களை பற்றி தெரியாது, எனது கணவர் ஆத்திவிளை சபையை சார்ந்தவர்.

2. வாதி மற்றும் அப்பகுதி மக்கள் பி பட்டிகை சொத்தை பயன்படுத்திதான் பிரதான சாலைக்கு வருகிறார்கள் என்றால் சரியல்ல. ஆத்திவிளை கிராமத்தில் பி பட்டிகை சொத்தை ஒட்டி தற்போது எத்தனை வீடுகள் உள்ளது என்றால் சுமார் 20 வீடுகள் உள்ளது. கல்லறை தோட்டங்களும் உள்ளது என்றால் சரிதான். பி பட்டிகை சொத்தில் மின்கம்பங்கள் நடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பி பட்டிகை சொத்து இரயில்வேக்கு சொந்தமான இடத்தை சென்று அடைகிறது என்றால் சரிதான். வழக்கு பி பட்டிகை சொத்து முன்பு இரண்டு அடி வீதியில் இருந்தது என்றால் சரிதான், எனது மாமனார் 1994 ல் கிரயம் பெறும் சமயம் மேற்படி இடம் குறுகலாக இருந்ததால் மேலும் இரண்டு அடி இடம் விட்டார்.

3. தற்போது தண்டவாளத்தை இரண்டு வழி தடமாக மாற்றும் வேலை நடந்துவருகிறது என்றால் சரிதான். எனவே அப்பகுதிக்கு செல்ல தடைவிதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.பொதுவாக தண்டவாளத்தை பாதையாக பயன்படுத்த முடியாது என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. பி பட்டிகை சொத்தை எனது மாமனாரின் வீட்டிற்கு முன்பு அடைத்துவிட்டால் பிரதான சாலையை யாரும் சென்று அடைய முடியாது என்றால் சரியல்ல. நான் குறிப்பிட்ட 15.09.2023 தேதியிட்ட சம்பவம் எனது மாமனார் பி பட்டிகை பாதையை அடைத்ததால் ஏற்பட்ட சம்பவம் ஆகும். எனது மாமனார் தற்போது உயிருடன் இல்லை என்றால் சரிதான், 2019 ல் இறந்துவிட்டார்.

4. எனது மாமனார் உயிருடன் இருக்கும்போது பி பட்டிகை சொத்தை தொட்டு உள்ள

சொத்தின் உரியமையாளர்கள் பாதைக்காக இடம் ஒதுக்கி உருவாக்கிய பாதை என்றால் சரியல்ல. அவ்வாறு பாதை ஒதுக்கப்பட்டதால் தான் நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் பி பட்டிகை பாதையில் ஒருசில இடங்களில் காண்கீரிட் தளம் அமைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல பிரச்சனையின் போது மண் தளம் தான் இருந்தது. மற்ற நபர்கள் பாதைக்கு என்று குறிப்பிட்ட இடத்தை விட்டுவிட்டு மீதமுள்ள இடத்தை அனுபவித்து வந்தார்கள் என்றாலும் எனது கணவர் சொத்து விலையேற்றதால் பாதைக்கு ஒதுக்கிய இடத்தை அபகரித்தார் என்றால் சரியல்ல.

5. எனது மாமனார் சுயவிருப்பத்தின் பேரில் பாதைக்கு என்று விட்டுக்கொடுத்த இடத்தை தற்போது நாங்கள் மீண்டும் உரிமை கோரமுடியாது என்றால் சரியல்ல. நாங்கள் பி பட்டிகை சொத்தை அபகரித்து கட்டிய காம்பவுண்ட் சுவரை இடித்தால் 07.10.2023 தேதியில் காவல் துறையினரை வசப்படுத்தி குற்ற எண் 464/2023 வழக்கை பதிவு செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எனது கணவர் உடன் பிறந்தவர்கள் உண்டா என்றால் நான்கு நபர்கள் உண்டு. தாவா குறித்து எனக்கு எந்த விபரமும் தெரியாது என்றாலும் எனவே எனக்கு சாட்சி சொல்ல தகுதி இல்லை என்றால் சரியல்ல. நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் வழக்கிற்கு தொடர்ப்பு இல்லாததும் ஏற்றுகொள்ள முடியாத ஆவணங்கள் என்றால் சரியல்ல. வாதிகள் கோரிய பரிகாரங்கள் வாதிக்கு கிடைக்கதக்கது என்றால் சரியல்ல.

**(ஒப்பம்)**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**இரணியல்.**